மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தேசியம்

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 112 | 13.10.2023 (வெள்ளிக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 08 | ஊக்குவிப்பு : ரூ 30.00

# உறவுகளைத் தேடிவந்த 144 உறவுகள் உயிரிழப்பு!



காணாமல் போன தனது மகனைத் தேடிவந்த தந்தையான வவுனியா மகாறம்பைக்குளம் ஶ்ரீராமபுரம் பகுதியை சேர்ந்த முத்தையா ஆறுமுகம் (வயது65) சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

இவரது மகனான ஆறுமுகம் சிவகுமார் கடந்த 2007 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டிருந்தார்.

அவரைத்தேடி வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களில் குறித்த தந்தை கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தருமாறு போராடியிருந்தார். இந்நிலையில் மகனை காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் பலர், தங்களுடைய உறவுகளைத் தேடி போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். அவர்களில் பலரும் உறவினர்களை காணாமலே மரணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு – கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்களது உறவுகள் பல்வேறு போராட்டங்களை நீண்டகாலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

பக்கம் 05

# பல்கலையில் போராட்டம்!




பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பினர் நேற்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

தேசிய பல்கலைக்கழக ஒழுங்கமைப்பை பாதுகாத்தல், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்த்தல், வரவு செலவு திட்டத்தில் பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளத்தை 40 வீதத்தால் அதிகரித்தல், ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதிக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை மீண்டும் செலுத்துதல், கல்விசார ஊழியர்களின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்த கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்த கவனயீர்ப்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை,யாழ்.பல்கலைக்கழகஊழியர் சங்கத்தினர் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக நுழைவாயிலில் இந்த கவனயீர்ப்பு

பக்கம் 05

# மோடிக்கு கடிதம்: இன்று முடிவு!

இந்திய பிரதமர் நரேந்திர மோடியினை சந்தித்து தமிழ் மக்களின் நிலைகள் குறித்து தெளிவுபடுத்தி தீர்க்கமான முடிவொன்றினை எட்டுவதற்கு தமிழ் தேசிய கட்சிகளை சேர்ந்த ஏழு கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றினை அனுப்ப தயாராக உள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் இடம்பெற்ற கட்சி தலைவர்களுக்கு இடையிலான சநத்திப்பினை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


கடிதத்தினை உடனடியாக அனுப்புவதா? இல்லையா? என்பது குறித்து இன்று (13) வெள்ளிக்கிழமை நாங்கள் மீளவும் கூடியே தீர்மானம் எடுக்கவுள்ளோம்.

சில கட்சி தலைவர்கள் வருகைதரா மையின் காரணமாக இறுதி முடிவு எட்டப்பட வில்லை. 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைபடுத்த வேண்டிய தார்மீக

பக்கம் 05



# இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு அவசர தேவைகள்: விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை



இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பிற்கும் இடையில் நிலவும் கடுமையான மோதல்களை கருத்தில் கொண்டு, இஸ்ரேலில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட அவசர தேவைகள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கிணங்க, இஸ்ரேலில் வசிக்கும் இலங்கை மக்களின் தேவைகள் தொடர்பில் அதிகபட்ச தலையீட்டை வழங்குவதற்காக இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளன.

இஸ்ரேலில் பணிபுரியும் அல்லது வேறு காரணங்களுக்காக தங்கியிருக்கும் இலங்கையர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பின் அல்லது அது தொடர்பான வேறு ஏதேனும் பிரச்சினைகள் காணப்படுமாயின், இலங்கை அதிகாரிகளுக்கு நேரடியாக அறிவிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 0094 117966396 எனும் தொலைபேசி இலக்கத்திற்கோ, 0094 767463391 எனும் 'வட்ஸ அப்' இலக்கத்திற்கோ அல்லது opscenga@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ தொடர்புகொண்டு தகவல்களை வழங்க முடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட குடிவரவு குடியகல்வு நடைமுறைகள் மூலமாகவோ, வேறு எந்த முறையிலோ இஸ்ரேல் சென்றுள்ள எந்தவொரு இலங்கையரும் இந்த சேவையைப் பெற முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

## கொழும்பில் அமெரிக்க கப்பல்



அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்த கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நாட்டில் நங்கூரமிடப்பட்டிருக்குமென கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் 24 பேர் வருகை தந்துள்ளனர். அவர்கள் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலங்களுக்கும் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

## மருந்து முன்பதிவுகளையும் இடைநிறுத்துமாறு அறிவுறுத்தல்

### - சுகாதார அமைச்சர் அறிவிப்பு

நாட்டில் மருந்து விநியோகம் தொடர்பில், பாரிய நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல முன்பதிவுகளையும் இடைநிறுத்துமாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், குறித்த முன்பதிகளை இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளருக்கும் நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.



அத்துடன், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அனைத்து விசாரணைகளும் நிறைவடையும் வரை, உடனடியாக அமுலாகும் வகையில் செலுத்தப்பட வேண்டிய சகல கொடுப்பனவுகளையும் இடைநிறுத்துமாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பணிப்புரை விடுத்துள்ளார்.

## வடமாகாணத்தின் நிலை குறித்து பிரித்தானிய அமைச்சர் மகிழ்ச்சி





வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக பிரித்தானிய அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று யாழ்.நகரில் இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்டன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரித்தானிய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் வடமாகான மக்களின் வாழ்க்கை முறையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் சிறந்த எதிர்காலம் தெரிவதாகவும் பிரித்தானிய அமைச்சர் கூறியுள்ளார்.

வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியனுக்கு ஆளுநர் விளக்கமளித்துள்ளார்.

வடமாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ்வை கட்டியெழுப்புவதற்கும் பூரண ஆதரவை வழங்குவதாக பிரித்தானிய அமைச்சர் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக் கலந்துகொண்டார்.

# தமிழர் கல்வி கட்டமைப்பு எதிர்கொள்ளும் சவால்கள் விரைவில் தீர்வு காணும்: மனோ



தமிழ் மாணவர்களின் ஒட்டுமொத்த தமிழர் கல்வி கட்டமைப்பு எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகங்கொடுக்க இன்று நாம் அங்குரார்ப்பணம் செய்துள்ள தமிழர் கல்வி மேம்பாட்டுக் கழகம், முழு வீச்சுடன் செயற்படும் என நான் திடமாக நம்புகின்றேன் என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழர் கல்வி மேம்பாட்டுக் கழக அங்குரார்ப்பண நிகழ்வில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், மேம்பாட்டுக் கழகத்தின் போசகராக மனோ கணேசனும், தலைவராக ப.பரமேஸ்வரனும், கே. நிரஞ்சன் செயலாளராகவும், நிதி செயலாளராக எம். ஜெயப்பிரகா/ம் நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பதவிகளுக்கான நியமனங்கள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது, "தேசிய, மாகாணசபை மற்றும் தனியார் கல்வி கட்டமைப்பில் தமிழர் கல்விக்கான சமத்துவ வாய்ப்புகள் இன்மை, ஆளணி, பௌதிக வளம், அதிபர் தராதரங்கள், விஞ்ஞான, கணித, ஆங்கில, தொழிட்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கான தமிழ் மொழி ஆசிரியர்களின் கடும் பற்றாக்குறை என்பன அதிகரித்துள்ளன.

மேலும், தமிழ் மாணவர்களின் இடை விலகல், தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி தொடர்புகளில் தமிழ் மாணவர்களின் ஆர்வமின்மை, மூன்றாம் நிலை கல்வி, மேற்கல்வி, இடைநிலை கல்வி மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றுக்கான பாடசாலை மட்டத்திலான கல்வி வழிகாட்டல், தமிழ் மொழியிலான முன்பள்ளி கல்வி, பொது கல்வித்துறை தரவுகளைச் சேகரித்தல், முறைப்பாடுகளை ஒருமுகப்படுத்தி தீர்வு தேடல் ஆகிய விடயங்களை, நாம் இன்றைய இந்த முதல் சந்திப்பிலேயே ஆராய ஆரம்பித்துள்ளமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் ஊட்டுகின்றது.

அதிபரும் பரமேஸ்வரன் கல்வி வளர்ச்சித் துறைக்கு தகைமையானவர் என்ற காரணத்தாலேயே, சிலகாலமாக அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு வந்தேன்.

நானும், அவரும் கலந்து பேசி கண்ட கனவு இன்று நனவாகின்றது. பரமேஸ்வரனுடன் நீங்கள் அனைவரும் ஒத்துழைக்கிறீர்கள். எமது நோக்கங்களை சிறப்பாக நண்பர் பரமேஸ்வரன் முன்னெடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# மன்னாரிலிருந்து தொழிற்பயிற்சி உபகரணங்களை அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்ல முயற்சி!

## - தடுத்து நிறுத்தினார் செல்வம் அடைக்கலநாதனால்

மடு. கல்வி வலயத்தில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் மன்னார் தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள பெறுமதி வாய்ந்த தொழிற் பயிற்சி உபகரணங்களை அம்பாந்தோட்டைக்கு கொண்டுசெல்ல திட்டமிட்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் முயற்சியால் நேற்று இந்த விடயம் தடுத்து நிறுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் மன்னார் தொழிற் பயிற்சி அலுவலகத்திலிருந்து அழகு சாதனம் மற்றும் சிகை அலங்காரப் பொருட்கள் உள்ளிட்ட தொழிற் பயிற்சி உபகரணங்கள் அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்வதற்கு ஆயத்தமாகியுள்ளது.

இந்நிலையில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் அவர் குறித்த இடத்திற்கு விரைந்து சென்றுள்ளார்.

மன்னார் மாவட்டத்திற்கான தொழிற்பயிற்சி நிலையத்திற்கும், இளையோர்களின் தொழிற்பயிற்சிக்கும் என பல இலட்சம் பெறுமதியான அழகு சாதனம் மற்றும் சிகை அலங்காரப் பொருட்கள் குறித்த நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

எனினும் அவற்றை இங்குள்ள இளையோர்களின் தொழில் முயற்சிக்கு பயன்படுத்தாமல் அம்பாந்தோட்டைக்கு அனுப்புவதற்கான முயற்சிகள் நடைபெற்று பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக நேற்றும் வாகனமும் வந்ததுள்ளது.

இதனையடுத்த அப்பகுதி இளைஞர், யுவதிகள் மூலம் சம்பவத்தை கேள்விப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேரடியாக தொழிற்பயிற்சி நிலையத்திற்கு சென்று பார்வையிட்டு வடக்கு மாகாண ஆளுநரை தொடர்பு கொண்டு பேசியதன் அடிப்படையில் குறித்த பொருட்களை அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்ல இருந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த தொழிற்பயிற்சியை மன்னார் மாவட்டத்தில் மீண்டும் ஆரம்பித்து வைப்பதற்கு தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.



# மனுச நாணயக்கார - ஹரின் பெர்னாண்டோவின் மனு மீதான விசாரணைகள் நேற்று ஆரம்பம்!

தமது கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்டுள்ள தீர்மானத்தை வலுவற்றதாக அறிவித்து உத்தரவிடக் கோரி அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுச நாணயக்கார ஆகியோர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான விஜித் மலல்கொட, அச்சல வெங்கபுலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் இந்த மனு மீதான விசாரணைகள் இடம்பெற்றன.

மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைஃசர் முஸ்தபா, ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பிற்கு அமைய, கட்சி உறுப்புரிமையிலிருந்து ஒருவரை நீக்குவதற்கு, கட்சியின் செயற்குழுவுக்கு மாத்திரமே அதிகாரம் உள்ளதாக மன்றுரைத்தார்.

இந்தநிலையில், மேலதிக விசாரணைகளுக்காக குறித்த வழக்கு எதிர்வரும் 24ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# கிங் கங்கையை அண்மித்த பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு எச்சரிக்கை

கிங் கங்கையை அண்மித்த தாழ் நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என நீர்ப்பான திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் பொகவந்தலாவை பகுதியிலேயே அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

பொகவந்தலாவையில், 105.8 மில்லி மீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்தறையில் பலத்த மழைவீழ்ச்சி பதிவானதால் அக்குரஸ்ஸ, மாலிம்பட, திஹாகொட உள்ளிட்ட பல பகுதிகளில் காணப்பட்ட வெள்ள நிலைமை மீண்டும் அதிகரிக்கக்கூடும் என நீர்ப்பான திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப் பட்டுள்ளது. காலி , மாத்தறை, ஹம்பாந் தோட்டை, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, பதுளை ஆகிய மாவட்டங் களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.



இதேவேளை, நாளை முதல் மழை அதிகரிக்கக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா, மத்திய, கிழக்கு மாகாணங் களின் சில பகுதிகளில் 75 மில்லி மீட்டர் வரை மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 4 ஆண்டுகளுக்கு முன்னர் ஹெரோயினுடன் கைதான ஈரானியர்கள் 9 பேருக்கு ஆயுள் தண்டனை!



4 ஆண்டுகளுக்கு முன்னர் 80 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட ஈரான் நாட்டு பிரஜைகள் 9 பேருக்கு, கொழும்பு மேல்நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தமது கட்சிகாரர் குற்றச்சாட்டுக் களை ஏற்றுக் கொள்கிறோம் என பிரதிவாதிகள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்துள்ளார். இதேவேளை, இலங்கை கைச்சாத்திட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைக்கு அமைய, சந்தேக நபர்களுக்கான தண்டனையை நிறை வேற்றுவதற்காக அவர்களை தங்களது சொந்த நாட்டுக்கு நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# பாடசாலை மாணவர்களிடையே தீவிரமாக பரவி வரும் கண் நோய்!

கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பரவி வரும் கண்நோய் தொடர்பில், சுகாதாரத்துறை தொடர்ந்தும் அவதானம் செலுத்தி வருகின்றது.

கொழும்பு மேற்கு, மத்திய, வடக்கு மற்றும் பொரளை ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் மத்தியில் இந்த நோய் பரவி வருவதாக கொழும்பு சிரேஸ்ட சுகாதார வைத்திய அதிகாரி ருவான் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த கண் நோய் தொடர்பில் பொதுமக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இந்த நோய்த் தொற்றுக்கு உள்ளான வர்களுக்கு கண்கள் சிவத்தல், தொடர்ந்தும் கண்ணீர் வெளியேறுதல், கண்களில் அரிப்பு ஏற்படுதல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களிடத்தில், 5 நாட்களுக்கு மேலாக இவ்வாறான அறிகுறிகள் நீடிக்குமாயின், உடனடியாக அவர்களை வைத்தியர் ஒருவரிடம்



அழைத்துச் செல்லுமாறு பெற்றோர்கள் அறிவு றுத்தப்பட்டுள்ளனர்.

கண்நோய் தொற்றை குறைப்பதற்காக அடிக்கடி கைகளைச் சுத்தம் செய்தல், கண்களைத் தொடுவதை தவிர்ப்பது உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகளை உரிய வகையில் பின்பற்றுமாறும் கொழும்பு சிரேஸ்ட சுகாதார வைத்திய அதிகாரி ருவான் விஜேமுனி வலியு றுத்தியுள்ளார்.

இதேவேளை, கொழும்பு – கொட்டாஞ் சேனையில் உள்ள பாடசாலை ஒன்றில் அதிகள விலான சிறுவர்களிடையே கண்நோய் தொற்று ஏற்பட்டதை அடுத்து, அந்த பாடசாலையின் 6ஆம், 7 ஆம், 8ஆம் தரங்களுக்கான கற்றல் செயற்பாடுகள் இன்று வரை இடை நிறுத்தப்பட்டுள்ளன.



**உறவுகளை...**

இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி அலைந்து பல துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து வயோதிப காலங்களில் நோய்வாய்பட்டு வைத்தியசாலைகளிலும் ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றனர்.

இவ்வாறு தமது உறவுகளை தேடி அலைந்து 144 உறவுகள் நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 28 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வடகிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வீதிகளிலிருந்து தமது போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேசத்தின் தலையீடுகளை கோரியும் ஐக்கிய நாடுகள் தமது விடயங்களில் தலையீடு செலுத்தி தீர்வுகளை பெற்றுத்தருமாறு கோரியும் உறவுகள் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களது போராட்டம் 2428 நாட்களை எட்டிய நிலையில் போராடி வருவது குறிப்பிடத்தக்கது.

**பல்கலையில்...**

வவுனியா பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பினரும் மதிய நேரத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் நேற்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பினரும் நேற்று பல கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்பை முன்னெடுத்தனர்.

**மோடிக்கு...**

பொறுப்பு இந்தியாவிற்கு காணப்படுகின்றது.

தற்பொழுது நாட்டின் நிலை குறித்தும்,தமிழ் மக்களது நிலை குறித்தும் 13 இனை அமுல்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் அவருடன் பேச நாம் விருப்பமாக இருக்கின்றோம்.

தமிழ் மக்கள் கூட்டணி, இலங்கை தமிழரசு கட்சி ,ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஜனநாயக போராளிகள் கட்சி,தமிழ் தேசிய கட்சி ஆகிய கட்சிகள் இணைந்து இந்த செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம்.

கட்சி தலைவர்கள் அனைவரும் இதற்கு சம்மதம் தெரிவிக்கின்ற பொழுதுதான் இது முழுமையான செயல்வடிவம் பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்

# வயோதிபர் மீது யானை தாக்குதல்!

ஒட்டுசுட்டான், மானுருவி பகுதியில் யானை தாக்குதலுக்கு இலக்கான வயோதிப குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கருவேலன் கண்டல் கிராம அலுவலகர் பிரிவில் மானுருவி கிராமத்தில் இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இரவு வேளை வீட்டிற்கு சென்று கொண்டிருந்த வேளை குடும்பஸ்தரை யானை தாக்கியுள்ளது. இதன்போது காயமடைந்த வயோதிபர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மானுரூவி கிராமத்தினை சேர்ந்த 55 வயதையடைய குமாரசாமி அரசகுமார் என்ற வயோதிபரே யானைத்தாக்குதலுக்கு இலக்கியுள்ளார்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டிற்கு வருகைத்தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் கடந்த மாதத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 938 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத்தந்துள்ளனர்.

இதன்படி நாட்டிற்கு வருகைத்தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 10 இலட்சத்தை கடந்துள்ளது.

# 37 குடும்பங்களுக்கு வீடும் இல்லை காணியும் இல்லை

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேராவில் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களில் 37 குடும்பங்களுக்கு வீடும் இல்லை காணியும் இல்லாத நிலை காணப்படுவதாக கிராம அபிவிருத்தி சங்கம் தெரிவித்துள்ளது.

தேராவில் கிராமத்தில் 347 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் பலர் திருமணம் செய்துகுடும்பங்களாக பதிவினை மேற்கொண்டு வந்துள்ளார்கள்.

இவ்வாறு கைக்குழந்தைகளுடன் வீடும் இல்லாதநிலையில் பெற்றோர்களின் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் சிறு கொட்டகைகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறு காணியும் இல்லாத நிலையில் வீடும் இல்லாத நிலையில் 37 குடும்பங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு உரம் வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கை

இம்முறை பெரும்போகத்தில், 3 மாவட்டங்களில் மரக்கறி மற்றும் ஏனைய பயிர்களை செய்கையிடும் 3000 விவசாயிகளுக்கு உரங்களை வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கிணங்க, விவசாயி ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உரம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியுதவி தனியார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் மாத்தளை, குருணாகல், மொனராகலை மாவட்டங்களில் அமுல்படுத்தப்படவுள்ளது.

ஒரு ஹெக்டெயருக்கு குறைவான நிலத்தில் காய்கறிகள் மற்றும் பிற பயிரகளை செய்கையிடும் விவசாயிகளுக்கே இவ்வாறு உரம் வழங்கப்படவுள்ளது.

# காச்சலினால் பீடிக்கப்பட்ட பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

காச்சலினால் பீடிக்கப்பட்ட பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வாடி ஒழுங்கை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சி.கேனுசா (வயது-24) ஒரு பிள்ளையின் தாய் ஆவார்.

கடந்த ஆறாம் திகதி காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பின்னர், வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் 10 ஆம் திகதி காலை பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பிற்பகல் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் பிற்பகல் உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



# தமிழ் எம்.பிக்கள் சபையின் உள்ளும், புறமும் தொடர்ந்து போராட வேண்டும்!

## -வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்



தமிழ்த் தேசிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வெற்றுக் கதிரைகளைப் பார்த்து பேசுவதை எதிர்வரும் நாட்களில் குறைத்து ஒற்றுமையாக சபையின் உள்ளும் புறமும் தொடர்ந்து போராட தயாராக வேண்டும்.

75 ஆண்டுகளாக பேசுகிறோம் மாற்றத்திற்குப் பதிலாக மக்களுக்கு கிடைத்தது அநீதிதான் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்திலும் ஒற்றுமை இன்மையை காட்டிக் கொடுக்காமல் சுயலாப நோக்கில் செயற்படாமல் ஒற்றுமையே பலம் என்ற நோக்கில் களத்தில் இறங்குங்கள். செயலில் காட்டுங்கள்.

பாதிப்பின் உச்சத்தில் விரக்தி நிலையில் வாழும் வடக்கு கிழக்கு மாகாண பெரும்பாண்மைத் தமிழ் மக்களின் மனநிலையை விளங்கிக் கொண்டு தொடர்ந்து போராட்டங்களை அறிவித்து பலவீன நிலையை வெளிப்படுத்தாது.

மக்கள் போராட்டங்களை அறிவித்து அரசியல் இருப்புக்கான குளிர்காய்தலை தவிர்த்து ஆக்க பூர்வமாக சர்வதேச நாடுகளின் அதன் ஊடகங்களின் கவனத்தை திசை திருப்ப போராட்டக் களமாக நாடாளுமன்றத்தின் சபையின் மையப் பகுதியையும் நாடாளுமன்ற முகப்பு வாயிலையும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் வாசஸ்தலத்தின் வாசலையும் முதன்மையான நாடுகளின் தூதரக வாசலையும் மாற்ற வேண்டும்.

உள்ளக நீதிப் பொறிமுறையில் நாட்டு மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிறேமதாஸ கூறிய விடையம் மிக முக்கியமானது.

தமிழர் தரப்பு அதனை வலுப்படுத்தி சர்வதேச நீதிப் பொறிமுறைக்கான கதவினைத் திறக்க தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து போராடுவதன் மூலமே மாற்றத்தை கொண்டு வரலாம் இத்தகைய போராட்டம் நாட்கள் கழிய பல எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைப்பதற்கான வழியை திறக்கும்.

தனித்து ஓடினால் மக்கள் நன்றாக ரசிப்பார்கள் வாக்கு வங்கி அதிகரிக்கும் என நினைக்கும் பிற்போக்கு சிந்தனையை தவிர்த்து சகலரையும் ஒன்றினைத்து போராட முன் வாருங்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களே.

இத்தகைய செயற்பாடே நீதிக்கான வழியை திறக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# வாழைச்சேனை சக்ஸஷ் முன்பள்ளி 5எஸ் தரச் சான்றிதழினை பெற்றறது

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஒழுங்கமைப்பில் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்பட்ட 5 எஸ் தரச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது 5 எஸ் தரச் சான்றிதழினை வாழைச்சேனை சக்ஸஷ் முன்பள்ளி பெற்றுக் கொண்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அதிதிகள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு, மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரனின் நெறிப்படுத்தலில் உற்பத்தித்திறன் இணைப்பாளர் எஸ்.புவனேந்திரன் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யு.எம்.டீ.அரங்க குணரெட்ணம் கலந்து சிறப்பித்ததுடன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன், பிரதேச செயலாளர்கள் மற்றும் 5எஸ் தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனத்தலைவர்கள் உள்ளிட்டோர் நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்துள்ளார்கள்.







# 2 ஆயிரத்து 518 தாதியர் பயிற்சியாளர்களுக்கு நியமனம்!



2018 ஆம் ஆண்டு தாதியர் பயிற்சியாளர்களாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 2 ஆயிரத்து 518 பேருக்கு நியமனத்தை வழங்குவதற்கு திறைசேரி இணக்கம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தொழிற்சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக முதற்கட்டமாக 1,000 தாதியர் பயிற்சியாளர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு முன்னதாக யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.


எனினும், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினர் முன்வைத்த கோரிக்கையை அடுத்து, சகல தாதியர் பயிற்சியாளர்களுக்கும் நியமனம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# இருளில் மூழ்கியது காஸா!









இஸ்ரேல் 3,60,000 இராணுவ வீரர்களை காஸாவில் குவித்துள்ள நிலையில், தேவையேற்பட்டால் தரை வழியாகவும் முன்னேறித் தாக்கும் ஏற்பாட்டை செய்து வருகிறது.

கடந்த வார இறுதியில் இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் குழுவினர், கண்ணில் தென்பட்ட இஸ்ரேலியர்கள் பலரைத் தாக்கினர்.

இளம்வயது பெண்ணையும் ஆணையும் கட்டி வைத்து அவர்கள் தலையில் சுட்டது, உயிரோடு மக்களை எரித்தது, பெண்களைப் பாலியல் கொடுமைக்குள்ளாக்கியது , வீரர்களின் தலையைத் துண்டித்தது என பல அக்கிரமங்களில் ஹமாஸ் குழுவினர் ஈடுபட்டதாக பிரதமர் நெதன்யாகு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதற்கெல்லாம் பதிலடி கொடுக்கவும் ஹமாஸ் குழுவை முற்றிலும் அழித்தொழிக்கவும் சபதம் ஏற்றுள்ளது இஸ்ரேல் அரசு.

இஸ்ரேலியர்கள் 150 பேர் ஹமாஸின் பிடியில் பணயக் கைதிகளாக உள்ளனர். மின்சாரம், உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டு விட்டது.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், மருத்துவமனைகள் நிரம்பியுள்ளதுடன், மருந்துப்பொருட்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

ஒரே நாளில் அகதிகள் எண்ணிக்கை 30 சதவீதம் அதிகரித்து 3,39,000 பேர் ஐ.நா. பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காஸாவிற்கான மின் விநியோகத்தை இஸ்ரேல் நிறுத்தயுள்ளது. அங்குள்ள ஒரே மின் நிலையமும் எரிபொருள் தீர்ந்துபோனதால் முடங்கியது.

ஏற்கனவே இஸ்ரேலின் தீவிர வான்வழித் தாக்குதலால் நிலைகுலைந்து போயுள்ள காஸா முனை மக்கள், மின்சாரம் இல்லாமல் அவதிக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, காஸாவில் ஹமாஸ் படையின் தாக்குதலில் 11 ஐ.நா ஊழியர்களும் 30 ஐ.நா.வின் பாடசாலை மாணவர்களும் பலியானதாக ஐ.நா செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

காஸாவில் பாலஸ்தீன அகதிகளுக்காக ஐக்கிய நாடுகள் சபையால் நடத்தப்படும் பாடசாலை மாணவர்களே உயிரிழந்துள்ளனர்.

காஸாவில் இருந்து 2,50,000-க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறியுள்ளதாகவும் அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையால் நடத்தப்படும் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 23 இலட்சம் பேர் வசிக்கும் காஸாவில் உணவு, எரிபொருள் விநியோகத்தை முழுமையாக இஸ்ரேல் நிறுத்தியுள்ளது.

இதனால், உணவு, எரிபொருள் மற்றும் தண்ணீர் போன்ற உயிர் காக்கும் பொருட்கள் காஸாவிற்குள் அனுமதிக்கப்பட வேண்டும என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பின் கமாண்டர் மஹ்மத் அல் ஜஹார் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

“இஸ்ரேல் தான் எங்களின் ஆரம்ப இலக்கு. உலகம் முழுவதும் எங்கள் செல்வாக்கை விரிவுபடுத்துவதே எங்களின் நோக்கம். முழு பிரபஞ்சமும் எங்கள் சட்டத்தின் கீழ் இருக்கும். லெபனான், சிரியாவில் உள்ள அனைத்து அரபு நாடுகளின் பாலஸ்தீனர்கள் மற்றும் அரேபியர்களுக்கு எதிராக அநீதி, அடக்குமுறை மற்றும் கொலைகள், குற்றங்கள் இல்லாத 510 மில்லியன் சதுர கிலோ மீட்டர் கொண்ட நிலப்பரப்பு ஒரு அமைப்பின் கீழ் வரும்,” என மஹ்மத் அல் ஜஹார் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, இஸ்ரேலிய வீரர்கள் மற்றும் பொதுமக்களை பணயக்கைதிகளாக வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பினர் காஸாவில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் அவர்களை ஒவ்வொருவராக அனுப்பி தூக்கிலிடப்போவதாக அச்சுறுத்தி உள்ளனர்.

முன்னதாக, காஸாவை ஆக்கிரமித்திருந்த இஸ்ரேல் கடந்த 2005-ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறியது.

அதன் பிறகு காஸாவில் ஆட்சியைக் கைப்பற்றிய ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் ஏவுகணை தாக்குதல் நடத்துவது, அதற்குப் பதிலடியாக காஸாவில் ஹமாஸ் நிலைகள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்துவது என்று பல ஆண்டுகளாக அங்கு பதற்றம் நீடித்து வருகிறது.

இந்த சூழலில், காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் குழுவினர் கடந்த சனிக்கிழமை ஆயிரக்கணக்கான ஏவுகணைகளை சரமாரியாக வீசி தாக்குதல் நடத்தினர்.

அத்துடன், இஸ்ரேலுக்குள் நிலம், கடல், வான் வழியாக 22 இடங்களில் ஊடுருவிய சுமார் 1,000 ஹமாஸ் அமைப்பினர், சுமார் 25 கிலோமீட்டர் வரை உள்ளே நுழைந்து பொதுமக்களையும், இராணுவத்தினரையும் சுட்டுக் கொன்றனர்.

இது தவிர, பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என பலரை ஹமாஸ் படையினர் பணயக்கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

இதுவரை இல்லாத அளவுக்கு தங்கள் நாட்டுக்குள் ஹமாஸ் நடத்திய இந்த கொடூரத் தாக்குதலுக்கு பதிலடியாக, கடந்த 6 நாட்களாக காஸா முழுவதும் இஸ்ரேல் இராணுவம் தீவிர வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது.

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும் வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**
**021 222 7557 / +94 76 567 3339**



அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

**சுன்னாகம்** 021 224 2022
**நெல்லியடி** 021 226 0700
**பருத்தித்துறை** 021 226 1100
**ஆவரங்கால்** 021 222 6688
**சித்தங்கேணி** 021 225 2500
**சாவகச்சேரி** 021 227 0700
**பூநகரி** 021 320 1818
**முழங்காவில்** 021 300 6544
**விஸ்வமடு** 021 320 1515
**மன்னார்** 023 225 1656
**கிளிநொச்சி** 021 228 5505
**வவுனியா** 024 222 7777



